முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1389

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.07.2023, புதன்கிழமை

1. அருந்தவ ராஜனே ஞானதேசிகா
அறமெனும் சக்தியாக வந்த அரங்கராஜா
மருந்தென உன் அமுது மக்களுக்கு கிட்ட
மரணம் தரும் பிணிகளும் அகன்றோடி பாதுபாப்பு நிகழும் எனக்கூறி
2. கூறியே சுப்ரமணியர் யானும் இனிதே
குருராஜன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
தெரிவிப்பேன் சோபகிருது நள்ளித்திங்கள் தன்னில்
குறையில்லா அரங்கன் சக்தி பெருகவே
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 03 ம் நாள், 19.07.2023, புதன்கிழமை)
3. பெருகவே கலியுகத்தில் ஆறுமுகன் யான்
பிரணவக்குடிலில் ஆற்றலை வளர்த்து வருகின்றேன்
வருகின்றேன் உயர்மாந்தர்களை ஒன்றுசேர்த்து வள்ளல் உன் தன்மை பெருக வேண்டியே
தருகின்றேன் அன்னதானசேவை மேலும் மிகுபடவே தக்கபடி அரங்கன் தர்மமும் கொள்கையும்
4. கொள்கையும் இந்த உலகை ஆளும்
குருராஜன் யாரென்று உலகே தேடி
ஆளுபவர்களும் தேடி வந்து இனிதே
அரங்கன் உனக்கு வாழ்த்து மழை பொழிந்து
5. பொழிந்துமே அரங்கனே கலியின் சிறந்த ஞானி என
புண்ணியவழிதேடி உன் மூலமாக வருங்காலம்
நல்லோர்கள் ஆளும் வல்லமைமிக்க
ஞான உலகமாக மாற்றம் பெறும்
6. மாற்றத்தை அரங்கன் உன்

தவசக்தி தர்ம சக்தி கொண்டே
மகான் சுப்ரமணியர் யானும்
இந்த பேருலகில் நடத்தி மகிழ்விப்பேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—